முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் பங்குனி மாதம் 12 திகதி முதல்

சுபகிருது வருடம் பங்குனி மாதம் 19 திகதி வரை

(26.03.2023 ஞாயிறு முதல் 02.04.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. இறைபலம் கொண்ட பாரதமே
   இணையாக தனித்துவம் கண்ட தமிழகமே
   குறைவிலா நீதிமான்கள் ஆண்ட
   கூறிடுவேன் இந்தியா தமிழகம் தன்னில்
2. தன்னிலே ஏனிந்த அவலங்கள்
   தவறான வழிகாட்டல் குழப்பங்கள்
   மண்ணையும் மக்களையும் வதைக்கின்ற
   மாபாதகங்கள் ஏனென அரங்கஞானி கேட்க
3. கேட்கவே அகத்திய மகரிஷி யானும்
   கூறிடுவேன் இந்தியா தமிழகத்தில்
   திட்டமுடன் சுபகிருது சேல் திங்களில்
   தக்கவியதிகதிமேல் மூவாறோர் திகதி வரை நடக்கும்
4. வரை நடக்கும் நிகழ்வாக வருங்கால பலனாக
   நாட்டிடுவேன் வார ஆசிதன்னை
   இடரான வரிச்சுமை கொடுமையும்
   ஏழ்மையை விரட்டா பதுக்கல் பகட்டலும்
5. பகட்டலான திட்டமும் பரோபகாரம்போல
   பன்மடங்கு கடன்களாக்கி சுருட்டலும்
   இக்கட்டான நிலைமையை நாட்டுக்குத் தந்து
   எல்லாத் துறைகளிலும் பற்றாக்குறை ஆக்கி
6. ஆக்கியே மக்களை மண்ணை அடிமையாக்கி
   ஆளுகின்றோம் என கீழும்மேலுமான தலைமைகள்
   தேக்கம்பல தந்து இயற்கையை சுரண்டி
   தெய்வநிந்தனை பலவகையும் செய்து
7. செய்துமே மதஇன சாதிவகையிலும்
   சேவை சமத்துவ அணுகுமுறையில்லா
   அய்யம்தர ஏழைபணக்கார பாகுபாடுடன்
   ஆபத்தான ஆளுமை நடத்தும் அவலநிலை
8. அவலநிலைகள் அனைத்துமே இனி
   அகன்றோடும் காலம் வரவிருக்க
   அவலமான தன்நிலைகளை மாற்றி
   ஆளுமைகள் அதிகார வர்க்கங்கள் எல்லாம்

9. எல்லோரும் தயவுநிலைக்கு வந்து
எல்லாம் மக்களுக்கானது என
வல்லமைபட சேவை ஆற்றினால்தான்
வருங்காலம் பெருமைபட ஆளுமை தப்பும்

10. தப்பியே இந்தியா தமிழகம் தானும்
தக்க வளர்ச்சி பூமியாக மாறும்
ஒப்பில்லா இறைபலம் கண்டவண்ணம்
ஓங்காரன் ஆசிபட தலைமைகள் சிறந்து

11. சிறந்துமே புண்ணிய பூமியாக
சித்தர்கள் சித்துக்கள் வெளிப்பட
பரந்த பேருலகம் தனக்கே
பாதுகாப்பான வழிகாட்டி உயர்ந்து நிற்கும்
அகத்திய மகரிஷி என் வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் பங்குனி மாதம் 12ம் நாள் 26.03.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் பங்குனி மாதம் 19ம் நாள் 02.04.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

கடவுளின் துணையை மிகுதியாக பெற்றுள்ள பாரத தேசமே ஈடுஇணையில்லாத வகையிலே தனித்துவம் மிக்க தமிழகமே எண்ணற்ற நீதிமான்களை தன்னகத்தே கொண்டு நீதிமிக்கதாய் விளங்கும் இந்தியா தமிழகத்திலே இன்றைய சூழலில் அவலங்களும் தவறான வழிகாட்டல்களுமாய் உண்டாகி குழப்பங்கள் மிகுந்து தேசத்திற்கும் மக்களுக்கும் கெடுதலாய் மாபாதகங்கள் நடப்பது ஏன்? என்று அகத்திய மகரிஷி எம்மிடம் அவதார ஞானி ஆறுமுக அரங்க மகா தேசிகனார் கேட்க அகத்திய மகரிஷி யானும் இந்தியா தமிழகத்தில் சுபகிருது வருடம் பங்குனி மாதம் 12ம் நாள் 26.03.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் பங்குனி மாதம் 19ம் நாள் 02.04.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

மக்களை துன்புறுத்தும் வகையில் விதிக்கப்படுகின்ற அதிகமான வரிச்சுமையும், மக்களின் ஏழ்மையை விரட்டாது சுயநலமாய் செயல்பட்டு மக்களுக்கான பொருள்களை பதுக்கி பொருள் சேர்த்தும் மக்களின் வறுமையை போக்கும் விதமாக திட்டங்களை செயல்படுத்தாமல் பகட்டான திட்டங்களை பரோபகாரம் மிக்க திட்டங்களை போல விளம்பரப்படுத்தியும் அத்திட்டங்களை செயல்படுத்திட ஏராளமான கடன்களை வாங்கி அவரவரும் பொருளை சுருட்டியும் நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் இக்கட்டான நிலையை உருவாக்கி நாட்டின் எல்லா துறைகளிலும் பற்றாக்குறையை உருவாக்கி நாட்டு மக்களையும், நாட்டையும் அடிமையாக்கி ஆட்சி செய்கிறோம் என்ற போர்வையில் மேலும் கீழுமான தலைமைகள் நாட்டினில் பலவிதமான தடைகளையும் உண்டாக்கியதோடு மட்டுமல்லாமல் நாட்டின் இயற்கை வளத்தையும் சுரண்டி தெய்வ நிந்தனைகளையும், கடவுள் மறுப்பு கொள்கைகளையும் உண்டாக்கியதோடு, மதம், இனம், சாதி என பாகுபாடுகளை நீக்கி சமத்துவமாக செயல்படாமல் அவற்றிலும் சமத்துவம் இல்லாமல் நடந்து மக்களுக்கு அச்சத்தை உண்டுபண்ணி ஏழை பணக்காரன் எனும் பேதங்களை அதிகமாக்கி ஆபத்தான முறையிலே ஆட்சியை நடத்துகின்ற அவலநிலை நிலவுகிறது.

இனிவரும் காலங்களிலே இவ்விதமான அவலநிலைகள் இந்த நாட்டைவிட்டே அகன்றோடுமப்பா. ஆகவே அதிகார ஆட்சியில் உள்ளவர்கள் அவலமான தனது நிலைகளை மாற்றி தயவான நிலைக்கு மாறி தானும் ஆட்சியும் மக்களுக்கானது என்ற சமத்துவ நிலைக்கு தயவுநிலைக்கு வந்து வல்லமையுடன் தொண்டுள்ளத்தோடு செயல்பட வருங்காலம் பெருமை மிக்க ஆட்சியாக தப்பி பிழைக்கும். இந்தியா தமிழகம் தகுந்த விதத்திலே வளர்ச்சி அடைந்து கடவுள் பலத்தையும் முழுமையாக பெற்று முருகப்பெருமானின் ஆசியுடன் தலைமைகள் சிறந்து விளங்கி இந்த தேசமே புண்ணிய பூமியாக மாறி சித்தர்களின் சித்துகள் எல்லாம் தேசமெங்கும் வெளிப்பட்டு இந்த உலகிற்கே நமது தேசம் வல்லமை மிக்க தேசமாக மாறி உலகையே காக்கும் தேசமாக வழிகாட்டும் தேசமாக பாதுகாப்பான தேசமாக வளர்ந்து உயர்ந்து நிற்குமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–